## 30.10 தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பொருத்துநர் உதவியாளர்களுக்கு ஊதிய ஏற்ற முறையில் கொணர்ந்து காலியாகவுள்ள சில பணியிடங்களில் பணியமர்த்துதல்

---

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 55 நாள் : 15.06.2006

படிக்க:

1. கைப்பம்பு பொருத்துநர் உதவியாளர்களால் அளிக்கப்பட்ட மனு நாள்.4.3.2005.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.20967/05/இ3, நாள்.25.4.05 மற்றும் 14.8.2005.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.3300/01/இ3, நாள்.28.9.2005.

**ஆணை**

படிக்கப்பட்ட 1ல் காணும் மனுவில் தமிழ்நாடு மாநில கைப்பம்பு பொருத்துநர் உதவியாளர்கள் சங்கமானது, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் சுமார் 985 நபர்கள் கைப்பம்புகளை பராமரிக்கும் பணிகளில் தொடர்ச்சியாக 23 ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும், இவர்களில் 200 நபர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி 50 வயது கடந்த நிலையில் உள்ளார்கள் எனவும், எனவே இவர்களை ஊதிய ஏற்றமுறையில் கொணர்ந்து பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு கோரிக்கை அளித்திருந்தது.

2. இந்நிலையில், படிக்கப்பட்ட 2ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் 31.3.2005 நாளன்று கீழ்க்கண்டவாறு ஊராட்சி ஒன்றியங்களில் காலிப்பணியிடங்கள் உள்ளதாகவும் அவைகளை நிரப்பிக் கொள்ள அரசின் அனுமதி கோரியிருந்தார்.

| | |
|---|---|
| ஈப்பு ஓட்டுநர் | 61 |
| பதிவறை எழுத்தர் | 113 |
| அலுவலக உதவியாளர் | 741 |
| இரவுக் காவலர் | 118 |

3. படிக்கப்பட்ட 1 மற்றும் 2ல் காணும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் மேலே பத்தி 2ல் தெரிவிக்கப்பட்ட இரவுக்காவலர் மற்றும் அலுவலக உதவியார்கள் காலிப் பணியிடங்களில் ஊராட்சி ஒன்றியங்களில் 1982 ஆம் ஆண்டு முதல் 1.4.1997 வரை பொருத்துனர் உதவியாளர்களை சிற்சில நிபந்தனைகளுக்குட்பட்டு பணியமர்த்தலாம் என கருதப்பட்டது. இது தொடர்பாக படிக்கப்பட்ட 3ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மாநிலத்தில் மொத்தம் 978 பொருத்துனர் உதவியாளர்கள் பணிபுரிகின்றார்கள் எனவும், காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர், நீலகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய 7 மாவட்டங்களில் பொருத்துநர் உதவியாளர் யாரும் பணிபுரியவில்லை எனவும், கன்னியாகுமரி, தேனி மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சியர்களைத் தவிர மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவர்களை ஊதிய ஏற்ற முறையில் கொணரலாம் என தெரிவித்துள்ளதாகவும், இது அரசளவில் முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின்பு, ஊராட்சி ஒன்றியங்களில் பொருத்துநர் உதவியாளர்களாக பணியாற்றும் மொத்தம் உள்ள 978 நபர்களில் 1982 முதல் 1.4.1997 வரை நியமனம் செய்யப்பட்ட 933 நபர்களை மட்டும் தகுதியின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள இரவுக்காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு முறையாக பணியமர்த்த அரசு ஆணையிடுகிறது.

அ) 1982 முதல் 1.4.1997 வரை நியமனம் செய்யப்பட்ட பொருத்துநர் உதவியாளர்களை அவர்கள் ஒவ்வொருவரும் தடங்கல் ஏதுமின்றி 10 வருடம் பணிமுடித்த நாளிலிருந்து, அவர்களை தகுதியின் அடிப்படையில் இரவுக் காவலர்களாகவோ அல்லது அலுவலக உதவிாளர்களாகவோ பணிநியமனம் செய்து ஊதிய ஏற்ற முறையில் கொண்டு வந்து, அவர்களின் பணியினை வரன்முறை செய்யும் அதிகாரத்தை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆ) பொருத்துநர் உதவியாளர்கள் இரவுக் காவலர்களாகவோ அல்லது அலுவலக உதவியாளர்களாகவோ பணியமர்த்தப்பட்டாலும், ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் வழங்கல் பணி செவ்வனே நடக்க, ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படும் பழுதுகளுக்கு பணிபுரியும் பொருத்துநர்களுக்கு உதவி செய்யும் பணிக்கும் செல்ல வேண்டும்.

இ) பொருத்துனர் உதவியாளர் பணி வரன்முறை செய்யப்படுவதனால் ஏற்படும் பணப்பயன்கள் யாவும் ஆணை வெளியிடப்படும் நாள் முதல்தான் வழங்கப்பட வேண்டும். ஊதிய நிலுவைகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

ஈ) பொருத்துநர் உதவியாளர்கள் அலுவலக உதவியாளர்களாகவோ அல்லது இரவுக் காவலர்களாகவோ பணியமர்த்தப்பட்டு, பணிவரன்முறை செய்யப்படும் பட்சத்தில், விதித்தளர்வு ஏதேனும் தேவைப்படின், உரிய விதியின் அடிப்படையில் விதித்தளர்வு கோரி அரசுக்கு கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உ)இவ்வாணையானது 1982 முதல் 1.4.1997 வரை உள்ள காலட்தில் நியமனம் செய்யப்பட்ட பொருத்துநர் உதவியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும். 1.4.1997க்கு பின்னர் பணியமர்த்தப்பட்ட பொருத்துநர் உதவியாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையிலேயே ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

ஊ) சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் பொருத்துநர் உதவியாளர்களுக்கு தேவையான காலிப்பணியிடங்கள் இல்லாதிருப்பின் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர்தான் அவர்களுக்கு அருகில் உள்ள பிற மாவட்டங்களில் பணிநியமனம் வழங்கப்பட வேண்டும்.

எ) இந்நேர்வில் பணிவரன்முறை செய்யப்படும் பணியாளர்களை பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்